இந்திய அரசு

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# 1950 ஆம் ஆண்டு மரபுச் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு தடுப்புச்) சட்டம்

(சட்ட எண் XII/1950)

(2001, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# THE EMBLEMS AND NAMES (PREVENTION OF IMPROPER USE) ACT, 1950

(Act No. XII of 1950)

(As on the 31st October, 2001)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

சென்னை-9

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
2006

PRICE : Rs. 21.00

# 1950 ஆம் ஆண்டு மரபுச் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு தடுப்புச்) சட்டம்

(சட்ட எண் XII/1950)

# THE EMBLEMS AND NAMES (PREVENTION OF IMPROPER USE) ACT, 1950

(Act No. XII of 1950)

# PREFACE

This edition of the Emblems and Names (Prevention of Improper Use) Act, 1950 (Act No.XII of 1950) as on the 31st October, 2001 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of India, Extraordinary, Part XV, Section 1, Vol.I dated 10th February, 2004 on pages from 12 to 17.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it became the Authoritative texts of the Act in Tamil.

New Delhi,
10th February, 2004.

(Signed)..........,
*Secretary to Government of India.*

## முன்னுரை

*2001, அக்டோபர் 31 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள 1950 ஆம் ஆண்டு மரபுச் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு தடுப்புச்) சட்டத்தின் (சட்ட எண் XII/1950)* இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, *2004, பிப்ரவரி 10 ஆம் தேதியிட்ட* இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி XV, *பிரிவு 1,* தொகுதி *1* இன் *12* முதல் *17 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.*

இந்த *அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய* தமிழ்மொழிபெயர்ப்பு, *1973*ஆம் ஆண்டு *அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டத்தின் (50/1973)* பிரிவு *2* இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் *அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.*

புதுதில்லி,
*10 பிப்ரவரி, 2004.*

(ஒப்பம்)..........,
இந்திய அரசாங்கச் செயலாளர்.

# 1950ஆம் ஆண்டு மரபுச்சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு தடுப்புச்) சட்டம்

(சட்ட எண் XII/1950)

## பொருளடக்கம்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | குறிப்பிட்ட மரபுச்சின்னங்களையும் பெயர்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடை செய்தல். | 1 |
| 4. | குறிப்பிட்ட நிறுமங்கள் முதலானவற்றைப் பதிவுசெய்வதைத் தடைசெய்தல். | 2 |
| 5. | தண்டம். | 2 |
| 6. | குற்றவழக்குத் தொடர்வதற்கு முன்ஒப்பளிப்பு. | 2 |
| 7. | காப்புரைகள். | 2 |
| 8. | இணைப்புப்பட்டியலைத் திருத்துவதற்கு மைய அரசின் அதிகாரம். | 2 |
| 9. | விதிகள் வகுக்க அதிகாரம். | 2 |
| | இணைப்புப்பட்டியல். | |

# 1950ஆம் ஆண்டு மரபுச் சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு தடுப்புச்) சட்டம்

## (சட்டம் XII/1950)

[1950, மார்ச்சு 1]

தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட மரபுச் சின்னங்களையும் பெயர்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான ஒரு சட்டம்.

நாடாளுமன்றத்தால், பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 1950ஆம் ஆண்டு மரபுச்சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாடு) தடுப்புச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும் [1][******] மற்றும் இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் இந்தியக் குடிமக்களுக்குங்கூடப் பொருந்தும்.

(3) இது மைய அரசு **அதிகாரமுறை அரசிதழில்** அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் [2]தேதியில் செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "மரபுச்சின்னம்" என்பது, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மரபுச்சின்னம், இலச்சினை, கொடி, விருதுச்சின்னம், மரபுரிமைச்சின்னம் தாங்கிய மேலங்கி அல்லது பட உருவ அமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) "தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு" என்பது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும், நிறுமம், நிறுவகம் அல்லது ஆட்களின் குழு எதையும், அல்லது வணிகக் குறி அல்லது வடிவமைப்பு எதையும், பதிவு செய்வதற்கான அல்லது புனைவுரிமை ஒன்றை வழங்குவதற்கான தகுதிறமுள்ள அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(இ) "பெயர்" என்பது, ஒரு பெயரின் சுருக்கக் குறியீடு எதையும் உள்ளடக்கும்.

குறிப்பிட்ட மரபுச் சின்னங்களையும் பெயர்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்து வதைத் தடை செய்தல்.

3. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், நபர் எவரும், மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறான நேர்வுகளில் மற்றும் வரைக்கட்டுகளின்படி தவிர, வணிகம், வாணிபம், தொழில் அல்லது அலுவல் எதனின் நோக்கத்திற்காக அல்லது புனைவுரிமை எதனின் உரிமை மூலத்திலும் அல்லது வணிகக்குறி அல்லது வடிவமைப்பு எதிலும், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பெயர் அல்லது மரபுச்சின்னம் எதையும் அல்லது அதனுடைய பொய்த் தோற்றம் எதையும், மைய அரசின் அல்லது மைய அரசால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்படலாகும் அரசு அலுவலரின் முன்இசைவளிப்பு இல்லாமல், பயன்படுத்துதலோ அல்லது தொடர்ந்து பயன்படுத்துதலோ ஆகாது.

---

[1] "ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர" என்னும் சொற்கள், 1956ஆம் ஆண்டு 62ஆம் சட்டத்தின் 2ஆம் பிரிவு மற்றும் இணைப்புப்பட்டியலால் (1-11-1956 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

[2] 1950ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது, 1950ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், II ஆம் பகுதி, 3ஆம் பிரிவு, 451 ஆம் பக்கத்தைப் பார்க்க.

4. (1) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு எதுவும், எந்தப் பெயர் அல்லது மரபுச்சின்னத்தைப் பயன்படுத்துதல், 3ஆம் பிரிவின் மீறுகையாக இருக்கிறதோ அந்த— குறிப்பிட்ட நிறுமங்கள் முதலான வற்றைப் பதிவு செய்வதைத் தடைசெய்தல்.

(அ) பெயர் எதையும் கொண்டிருக்கிற நிறுமம், நிறுவகம் அல்லது ஆட்களின் குழு எதையும் பதிவு செய்தலோ, அல்லது

(ஆ) மரபுச்சின்னம் அல்லது பெயர் எதையும் கொண்டு இருக்கிற ஒரு வணிகக் குறியை அல்லது வடிவமைப்பைப் பதிவு செய்தலோ, அல்லது

(இ) மரபுச்சின்னம் அல்லது பெயர் எதுவும் அடங்கியுள்ள உரிமைமூலம் ஒன்றினைக் கொண்டிருக்கிற புதிய கண்டுபிடிப்பு ஒன்றைப் பொறுத்தமட்டில், ஒரு புனைவுரிமையை அளித்தலோ ஆகாது.

(2) தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பின் முன்பு, மரபுச்சின்னம் எதுவும், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மரபுச்சின்னமா அல்லது அதனுடைய பொய்த் தோற்றமா என்னும் வினா எதுவும் எழுந்தால், அந்தத் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அந்த வினாவை அரசிற்குச் சுட்டியனுப்பலாம், மற்றும் அதன்பேரில் மைய அரசின் முடிபே அறுதியானதாகும்.

5. பிரிவு 3இன் வகையங்களை மீறுகின்ற எந்த ஆளும், ஐந்நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார். தண்டம்.

6. இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் எதற்காகவும், மைய அரசின் அல்லது இதன் பொருட்டு மைய அரசினுடைய பொது அல்லது சிறப்பு ஆணையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவருடைய முன்ஒப்பளிப்புடன் தவிர, குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதல் ஆகாது. குற்றவழக்குத் தொடர்வதற்கு முன் ஒப்பளிப்பு.

7. இந்தச் சட்டத்திலுள்ள எதுவும் நபர் எவருக்கும், இந்தச் சட்டமல்லாமல், அவருக்கு எதிராகக் கொண்டு வரப்படலாகும் உரிமைவழக்கு அல்லது மற்ற நடவடிக்கை எதிலுமிருந்தும், விலக்களிக்காது. காப்புரைகள்.

8. மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இணைப்புப்பட்டியலில் எதையும் சேர்க்கலாம் அல்லது மாறுதல் செய்யலாம், மற்றும் அத்தகைய சேர்ப்பு அல்லது மாறுதல் எதுவும் இந்தச் சட்டத்தில், அது செய்யப்பட்டிருந்தாற்போன்றே செல்திறம் உடையது ஆகும். இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்கு மைய அரசின் அதிகாரம்.

9. [1][(1)] மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு விதிகள் வகுக்கலாம். விதிகள் வகுக்க அதிகாரம்.

[1][(2) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்த காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதலாகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.]

[1] பிரிவு 9, பிரிவு 9(1) என மறு எண்ணிடப்பட்டது; அதன்பின்பு உட்பிரிவு (2) சட்டமியற்று ஒப்படைவு வகையங்கள் (திருத்தச்) சட்டம் 4/1986 இன் பிரிவு 2 மற்றும் இணைப்புப்பட்டியலால் புகுத்தப்பட்டது.

## இணைப்புப்பட்டியல்

[2(அ) மற்றும் 3ஆம் பிரிவுகளைக் காண்க]

1. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பெயர், மரபுச்சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.

2. உலக நல்வாழ்வு நிறுவனத்தின் பெயர், மரபுச்சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.

3. இந்திய தேசியக் கொடி.

[1][4. இந்திய அரசின் அல்லது மாநில அரசு எதனின் பெயர், மரபுச்சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை அல்லது அத்தகைய அரசு எதனாலும் அல்லது அத்தகைய அரசு எதனுடைய துறையினாலும் பயன்படுத்தப்பெறும் வேறு எந்த விருதுச் சின்னம் அல்லது மரபுரிமைச்சின்னம் தாங்கிய மேலங்கி.]

[2][5. [3][***] நான்கு முதன்மையான கோணங்களில் ஒப்பனை செய்யப்பட்ட எட்டு முகமுடைய வெள்ளைச் சிலுவையாக இருக்கிற கருவியைக் கொண்டுள்ள புனித ஜான் ஆம்புலன்ஸ் கழகம் (இந்தியா), மற்றும் ஜான் ஆம்புலன்ஸ் படைப்பிரிவில் (இந்தியா) மரபுச்சின்னங்கள், ஒரே மையமுடைய வட்டங்களால் அல்லது மற்ற ஒப்பனையால் அல்லது எழுத்து வரைவால் அந்தக் கருவி சூழப்பட்டிருந்தாலும் அல்லது இணைக்கப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்.]

[4][6. குடியரசுத் தலைவரின், ஆளுநரின், [5][***] [6][சதர்-இ-ரியாசத்] இன் அல்லது குடியரசு அல்லது இந்திய ஒன்றியத்தின் பெயர் அல்லது மரபுச்சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.]

[7][7.(i) இந்திய அரசு அல்லது ஒரு மாநில அரசு அளிக்கும் ஆதரவினை, அல்லது

(ii) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அரசால் அமைக்கப்பட்ட வட்டார அதிகார அமைப்பு எதனுடனான அல்லது கூட்டு நிறுவனம் எதனுடனான அல்லது குழுவுடனான தொடர்பினை,

குறிப்பாய் உணர்த்தலாகும் அல்லது குறிப்பாய் உணர்த்துவதாகக் கருதப்படலாகும் பெயர் எதுவும்.]

[7][8. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்புகளின் பெயர், மரபுச்சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.]

---

1. 1955ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1036ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட 1955ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. 1230 வாயிலாக முதலிலிருந்த இனம் 4-க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 1952ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 546ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட 1952ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. 561 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.
3. 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ் பகுதி II, பிரிவு 3(ii), 3070ஆம் பக்கத்திலுள்ள எஸ்.ஓ. 2135/72 வாயிலாக விட்டுவிடப்பட்டது.
4. 1955ஆம் ஆண்டு இந்திய அரசிதழின் பகுதி II, பிரிவு 3, 1036ஆம் பக்கத்திலுள்ள, 1955ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. 1230 வாயிலாகப் புகுத்தப்பட்டது.
5. "இராஜப்பிரமுகர்" என்னுஞ்சொல் 1956ஆம் ஆண்டு சட்டங்கள் (எண்3) இணக்க ஆணையினால் விட்டுவிடப்பட்டது.
6. 1955ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1807ஆம் பக்கத்திலுள்ள 1955ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஆர்.ஓ. 2011 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.
7. 1955 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் பகுதி II, பிரிவு 3, 1036 பக்கத்திலுள்ள, 1955 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் தேதியிட்ட எஸ்.ஆர். ஓ. 1230 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

[1][9. குடியரசுத் தலைவர் [2][***] குடியரசுத் தலைவர் மாளிகை, ஆளுநர் மாளிகையின் பெயர் அல்லது பட உருவ அமைப்பு.]

[3][9(அ). நாட்காட்டிகளில் அவற்றின் உற்பத்தியாளர்கள் மற்றும் அச்சிடுபவர்களின் பெயர் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்து, சரக்குகளை விளம்பரப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படாதிருக்கிற, அந்த நாட்காட்டிகளில், [4][சத்திரபதி சிவாஜி மகாராஜா அல்லது] மகாத்மா காந்தி, அல்லது பண்டிட் ஜவஹர்லால் நேரு, [4][ஸ்ரீமதி. இந்திராகாந்தி] அல்லது இந்தியப் பிரதம மந்திரியின் பட உருவ அமைப்பு பயன்படுத்தப்படுவதை தவிர அவர்களின் பெயர் அல்லது பட உருவமைப்பு.]

[5][10. அவ்வப்போது அரசால் ஏற்படுத்தப்பட்ட பதக்கங்கள், வில்லைகள் அல்லது சிறப்புப் பதக்கங்கள் அல்லது அத்தகைய பதக்கங்கள், வில்லைகள் அல்லது சிறப்புப் பதக்கங்களின் சிற்றுருக்கள் அல்லது படியுருக்கள் [6][அல்லது அத்தகைய பதக்கங்கள், வில்லைகள், சிறப்பு பதக்கங்கள் அல்லது அவற்றினுடைய சிற்றுருக்கள் அல்லது படியுருக்களின் பெயர்கள்.]]

---

1. 1955 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1807 ஆம் பக்கத்திலுள்ள 1955 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதியிட்ட எஸ்.ஆர்.ஓ. 2011 வாயிலாகப் புகுத்தப்பட்டது.
2. 1960 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 2185 ஆம் பக்கத்திலுள்ள, 1960 ஆம் ஆண்டு சூலை 30 ஆம் தேதியிட்ட எஸ்.ஓ. 1916 வாயிலாக விட்டுவிடப்பட்டன.
3. 1959 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 444 ஆம் பக்கத்திலுள்ள, 1959 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் தேதியிட்ட எஸ்.ஓ.416 வாயிலாக புகுத்தப்பட்டது.
4. 1968 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 1609 ஆம் பக்கத்திலுள்ள, 1968 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதியிட்ட எஸ்.ஓ.1120 வாயிலாக புகுத்தப்பட்டது.
5. 1956 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 280 ஆம் பக்கத்திலுள்ள 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 23ஆம் தேதியிட்ட எஸ்.ஆர்.ஓ.525 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.
6. 1956 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1110 ஆம் பக்கத்திலுள்ள, 1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ்.ஆர்.ஓ.1862 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

[1][11. பன்னாட்டுக் குடியியல் வான்வெளிப் பயண நிறுவனத்தின் பெயர், மரபுச் சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.]

[2][12. பன்னாட்டுக் குற்றவியல் காவல் நிறுவனத்தின் முழுமையான பகுதியாக உள்ள "இன்டர்போல்" (Interpol) என்னும் சொல்.]

[3][13. உலக வானிலை நிறுவனத்தின் பெயர், மரபுச் சின்னம் அல்லது அலுவல்முறை இலச்சினை.]

[4][14. இந்திய என்புருக்கிநோய்க் கழகத்தின் பெயர் மற்றும் மரபுச் சின்னம்.]

[5][15. பன்னாட்டு அணு ஆற்றல் முகவாண்மையின் பெயர், மரபுச் சின்னம் மற்றும் அலுவல் முறை இலச்சினை.]

[6][16. "அசோகச் சக்கரம்" மற்றும் "தர்மச்சக்கரம்" என்ற பெயர்கள் அல்லது இந்திய தேசியக் கொடியில் அல்லது இந்திய அரசின் அல்லது மாநில அரசின் அல்லது அத்தகைய அரசு எதனுடைய துறையின் அலுவல்முறை இலச்சினையில் பயன்படுத்தப்படுகிறவாறான அசோகச் சக்கரத்தின் பட உருவ அமைப்பு.]

[7][17. நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலம் எதனின் சட்டமன்றத்தின் அல்லது உச்ச நீதிமன்றத்தின் அல்லது மாநிலம் எதனின் உயர் நீதிமன்றத்தின் அல்லது மையச் செயலகத்தின் அல்லது மாநில அரசு எதனின் செயலகத்தின் அல்லது பிற அரசு அலுவலகம் எதனின் பெயர் அல்லது மேற்சொன்ன நிறுவனங்கள் எவற்றினுடைய கையுடைமையில் உள்ள கட்டடம் எதனின் படஉருவ அமைப்பு.]

[8][18. முன்புறத்தில் ஒரு தாமரையும் பின்புறத்தில் உதிக்கும் சூரியனையும் கொண்டு இவை முழுவதையும் வட்டமிட்டிருக்கும் ஒரு கொடிய பாம்பு அதன் அடிப்பகுதியில் [ 'तन्नो हंस: प्रचोदयात्' ] என்ற சொற்களுடன் நீரில் மிதக்கும் ஒரு அன்னப்பறவையை அடக்கியிருக்கும் இராமகிருஷ்ணா மடம் மற்றும் பணிமன்றத்தின் பெயர் மற்றும் மரபுச் சின்னம்.]

---

1. 1957ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1958 ஆம் பக்கத்திலுள்ள 1957 ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் தேதியிட்ட எஸ்.ஆர்.ஒ.2906 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

2. 1959ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3, 1453 ஆம் பக்கத்திலுள்ள 1959 ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் தேதியிட்ட எஸ்.ஆர்.ஒ.1429 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

3. 1959ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 1726 ஆம் பக்கத்திலுள்ள 1959 ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 1544 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

4. 1959ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 1812ஆம் பக்கத்திலுள்ள 1959 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 1605 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

5. 1961ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 2645ஆம் பக்கத்திலுள்ள 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 2438 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

6. 1964ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 908ஆம் பக்கத்திலுள்ள 1964 ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 671 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

7. 1964ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 4209ஆம் பக்கத்திலுள்ள 1964 ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 3760 வாயிலாகச் சேர்க்கப்பட்டது.

8. 1973ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 2810 ஆம் பக்கத்திலுள்ள 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு 4ஆம் தேதியிட்ட எஸ்.ஒ. 2356 ஆல் சேர்க்கப்பட்டது.

[1][19. முன்புறத்தில் ஒரு தாமரையையும் பின்புறத்தில் உதிக்கும் சூரியனையும் கொண்டு இவை முழுவதையும் வட்டமிட்டிருக்கும் ஒரு கொடிய பாம்பு அதன் அடிப்பகுதியில் [तन्नो हंसः प्रचोदयात्] என்ற சொற்களுடன், நீரில் மிதக்கும் (வலது பக்கம் நோக்கியுள்ள) ஓர் அன்னப்பறவை அடங்கியிருக்கும் ஸ்ரீசாரதா மடம் மற்றும் இராமகிருஷ்ணா சாரதா பணிமன்றத்தின் பெயர் மற்றும் மரபுச் சின்னங்கள்.]

[2][20. "பாரத சாரணர்கள் மற்றும் வழிகாட்டிகளின்" பெயர் அதன் "மரபுச் சின்னத்துடன்"]

[3][21. ஐந்து வளையங்கள் இடையிடையே கோர்த்து பின்னப்பட்டு அதில் அடங்கியதான பன்னாட்டு ஒலிம்பிக் குழுவின் பெயர் மற்றும் மரபுச்சின்னம்.]

[4][22. கருப்பு-வெள்ளையில், ஒரு வட்டத்திற்குள் பொறித்து வைக்கப்பட்டதான முன்னோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும் ஆணும் பெண்ணுமான இரண்டு இளைஞர்களின் பக்கவாட்டு முகத்தோற்றங்களைத் தாங்கியுள்ளதும், இரண்டு முகங்களும் வலது பக்கம் நோக்கித் திரும்புமாறும், ஆண் முகத்தின் பக்கவாட்டுத் தோற்றம் கருப்பாகவும் பெண் முகத்திற்குப் பின்புறம் அமைந்துள்ளதாகவும்; பெண் பக்கவாட்டு முகத் தோற்றத்திற்குப் பின்புறம் இலையுடன் கூடிய கிளையை எடுத்துச் செல்கிற அலகு வட்டத்திற்கு வெளிப்புறம் நீட்டிக்கொண்டும், எதிர்திசையில் பறக்கிற ஒரு புறாவின் வால்பகுதியினையும் இறகையும் கொண்டதாகவும், புறாவின் பக்கவாட்டுத் தோற்றம் வெள்ளை நிறத்திலும் பெண் முகத்தின் பக்கவாட்டுத் தோற்றத்தின் எஞ்சியுள்ள பகுதி கருப்பு நிறத்திலுள்ள கிடைக்கோடுகளாலும் அமைந்ததாகவும், ஆண் முகத்தின் கருப்பு பக்கவாட்டுத் தோற்றத்திற்கும் வட்டத்திற்கும் இடையேயுள்ள பகுதி கருப்பு நிறத்திலுள்ள கிடைக்கோடுகளால் அமைந்ததாகவும், புறாவின் பக்கவாட்டுத் தோற்றத்திற்கும், புறாவிற்கு இடது பக்கம் உள்ள வட்டத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியானது கருப்பு நிறத்தில் அமைந்ததாகவும், இலையும் கிளையும் கருப்பு நிறத்தில் அமைந்ததாகவும், புறாவின் ஒரு கண் ஒரு புள்ளி வடிவத்தில் காட்டப்பட்டும் உள்ள தேசிய இளைஞர் மரபு சின்னங்களின் பெயர் மற்றும் மரபுச் சின்னம்.]

---

1. 1973ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 3126 ஆம் பக்கத்திலுள்ள 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியிட்ட எஸ்.ஓ.2697 ஆல் சேர்க்கப்பட்டது.

2. 1974 ஜுலை 27ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 1928 ஆம் பக்கத்திலுள்ள 1974 ஆம் ஆண்டு ஜுலை 10 ஆம் தேதியிட்ட எஸ்.ஓ. 1841 ஆல் சேர்க்கப்பட்டது.

3. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு 26ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 2331 ஆம் பக்கத்திலுள்ள 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18ஆம் தேதியிட்ட எஸ்.ஓ. 2457 ஆல் சேர்க்கப்பட்டது.

4. 1986 ஆம் ஆண்டு ஜுன் 23ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3(ii), 2ஆம் பக்கத்திலுள்ள எஸ்.ஓ. 373(E)/86 ஆல் புகுத்தப்பட்டது. (எண் 246)